பிற்பகல் 12–45

4. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமக்கென வாழா தியாகம், தலைநிமிர்ந்த செல்வாக்கு, துச்சமென பகை துரத்தும் போர்க்குணம், வல்லரசு தேசமும் வருகை தந்து வாழ்த்திப் போகிற வல்லமை, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தியை தமதாக்கும் மகாசக்தி, நினைப்பதெல்லாம் நிஜங்களாக்கி, நிஜங்களையெல்லாம் நிச்சயமாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிச்சயத்தையும் நித்தம் ஜெயிக்கும், சத்தியமாக்கும் வீரத்திருமகள், செந்தமிழர் பூமிக்கு எண்ணில்லா வளங்களைச் சேர்த்துத் தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது வணக்க மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே தன்னுயிரென்னும் தவ வாழ்வு வாழ்ந்து, தமிழினமே தன்னுறவென்னும் தாய்மையின் வரம் கொண்டு, 32 ஆண்டுகளுக்குப் பின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூன் 23

முக்காலமும் உழைக்கின்ற மூலவர், முக்கடல் சூழ்ந்த பாரத தேசத்தின் பாராளுமன்றத்தில் மூன்றாம் பெரும் இயக்கம் ஆக்கிய பொற்கால ஆட்சிதரும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பில்லாத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐவகை நிலம் சூழ்ந்த அன்னைத் தமிழ் பூமிக்கு ஆறாம் முறையும் முதல்வர், அகிலம் வியக்கும் ஆற்றல்களால் முதல்வர்களின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) இன்ன பிற மாநிலங்களும் பின்பற்றவே இணையற்ற திட்டங்கள் தந்து, இலக்கணங்கள் வகுத்திட்ட இந்தியத்தின் இமயம் நிகர் முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வளாகத்தில் எவராலும் எட்ட முடியாத வள்ளலாக, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் பீடுநடை போடுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சிக்கென ஓர் அறையை வழங்கிட ஆணையிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25(1)—ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–48 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

–ஏதுமில்லை–